இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விமாணி பட்டப்படிப்பு(இயற்கை விஞ்ஞானம்)

மட்டம் 05 - இறுதிப்பரீட்சை 2008

**ESU 3213 – ஒப்பீட்டுக்கல்வியும் கல்விப் பிரச்சினைகளும்**

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி. 29.08.2008 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

பகுதி I இலிருந்து சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. புராதான கால பிரிவேனாக்களின் கலைத்திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ஐந்து பாடப் பரப்புகளை குறிப்பிடுக.

2. போர்த்துக்கேயரினால் உருவாக்கப்பட்டிருந்த "சாதாரணப் பாடசாலைகளி" னது பிரதான தொழிற்பாடுகளை சுருக்கமாகக் கூறுக.

3. கல்வியைப் பரந்தளவில் விரிவாக்குவதில் கோல்புரூக் ஆணைக்குழுவினதும் மோர்கன் குழுவினதும் பரிந்துரைகளை ஒப்பிடுக.

4. தேசிய கல்வி ஆணைக்குழு 1961இல் மேற்கொண்ட இரு பரிந்துரைகளை பெயரிடுக.

5. இலங்கை கட்டாயக் கல்வி எனும் இலக்கை அடைவதில் எதிர்நோக்கும் தடைகளுள் மூன்றினை பெயரிடுக.

6. பிள்ளைகளது கல்விசார் பேறுகளில் காணப்பட்ட சமூக வகுப்பு செல்வாக்கினை ஈடு செய்வதற்காக 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஐக்கிய இராஜ்யம் அறிமுகப்படுத்திய மூன்று நடவடிக்கைகளை குறிப்பிடுக.

7. இலங்கையின் தற்போதைய உயர் கல்வியில் காணப்படும் சர்வதேசரீதியான செல்வாக்குகள் மூன்றினை சுருக்கமாக விபரிக்குக.

8. சார்க் பிராந்தியத்தில் காணப்படும் பொதுவான கல்விசார் எழுவினாக்கள் ஐந்தினைப் பெயரிடுக. (5× 8= 40 புள்ளிகள்)

## பகுதி II

9. I. இலங்கையின் அரச சபையுகத்தில் கல்வியில் மேற்கொள்ளப்பட்ட ஐந்து பிரதான மறு சீரமைப்புகளை சுருக்கமாகக் கூறுக. (05 புள்ளிகள்)

   II. சம கல்வி வாய்ப்புகளை அளிப்பதில் பங்களித்த இரு மறுசீரமைப்புகளைத் தெரிவு செய்து குறித்த யுகத்தில் இம் மறுசீரமைப்புகள் ஏன் முக்கியமாகின என்பதை விபரிக்குக. (08 புள்ளிகள்)

   III. குறித்த யுகத்தில் சமூக அபிவிருத்தி தொடர்பாக இம்மறுசீரமைப்புகள் கொண்டிருந்த முக்கியத்துவத்தை கணிப்பிடுக. (07 புள்ளிகள்)

10. I. இலங்கையில் சமூக பொருளாதார சூழலமைவுகளுக்கு பொருத்தமான வகையில் கல்வியை ஆக்குவதற்காக பாடசாலை மட்ட சிரேஷ்ட இடைநிலை கலைத்திட்டத்தில் 1977 கொண்டுவரப்பட்ட மறுசீரமைப்புகள் யாவை? (10 புள்ளிகள்)

II. நாட்டின் சமூக, பொருளாதார விருத்திகளில் இம்மறுசீரமைப்புகளின் பொருத்தப்பாடு குறித்து உமது கருத்துக்கள் யாவை? (10 புள்ளிகள்)

11. I. "பல் கலாசார கல்வி" என்பதை வரைவிலக்கணப்படுத்துக. (05 புள்ளிகள்)

II. உலகின் அனேக நாடுகளில் "பல் கலாசார சமூகத்திற்கான கல்வி" ஒரு சவாலாக ஏன் உருவெடுத்துள்ளது? (05 புள்ளிகள்)

III. பல் கலாசார கல்வியினூடாக இலங்கையின் ஐக்கியத்தை மேம்படுத்துவதற்கு நாட்டின் முறைசார் கல்வித்துறையினூடாக நடைமுறைப்படுத்தக்கூடிய ஐந்து உத்திகளை சுருக்கமாக விபரிக்குக. (10 புள்ளிகள்)

12. I. விருத்தியடைந்த நாடுகளின் கல்வியில் காணப்படும் ஐந்து புதிய போக்குகளை சுருக்கமாக விபரிக்குக. (05 புள்ளிகள்)

II. இப்புதிய போக்குகளில் செல்வாக்குச் செலுத்தியுள்ள காரணிகளை சுருக்கமாக ஆராய்க. (07 புள்ளிகள்)

III. சமூகமொன்றில் இப்போக்குகளின் சாத்தியமான விளைவுகளை பரீசிலிக்க. (08 புள்ளிகள்)

13. "கல்வி முறைமைகளில் விருத்தியை ஏற்படுத்த முயலும் விருத்தியடைந்த நாடுகளில் உலகமயமாதல் சாதகமானதும், பாதகமானதுமான அம்சங்களை ஏற்படுத்தியுள்ளது."

I. உலகமயமாதலின் விளைவினால் ஏற்பட்டுள்ள இரண்டு நன்மைகளையும் இரண்டு தீமைகளையும் இனங்காண்க. (10புள்ளிகள்)

II. மேற்கூறப்பட்ட காரணிகளை நன்மைகள் தீமைகள் என இரு வகைக்குள் ஏன் கொண்டு வந்தீர்கள் என்பதனை விளக்குக. (10 புள்ளிகள்)

14. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சுருக்கக் குறிப்பு எழுதுக.

I. கோல்புரூக் ஆணைக்குழுவின் இலங்கையின் கல்விக்கான பரிந்துரைப்புகள்

II. யப்பானின் இடைநிலைக் கல்வயின் பிரதான பண்புகள்.

III. கல்வியின் சமத்துவம் தொடர்பாக காணப்பட்ட எழு வினாக்களுக்காக ஐக்கிய இராஜ்யத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

(10× 2= 20 புள்ளிகள்)

LIBRARY

(பதிப்புரிமையுடையது)